**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 66/2024** **Date:03.07.2026.**

**(PW1)- கீதா**

**<u>1 ஆம் பிரதிவாதி</u>** <u>தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் பிறப்பால் இந்து மதத்தை சார்ந்தவர் என்றாலும் பின்னர் கிறித்தவ மதத்திற்கு மாறினேன் என்றாலும் சரிதான். தற்போது கிறித்தவ மதத்தை பின்பற்றி வருகிறேன் என்றால் சரிதான். நான் தற்போது எங்கு வேலை பார்க்கிறேன் என்றால் நெய்யூர், LMAR அரசு தொடக்க பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். எனது பெற்றொருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் நானும் எனது மூத்த சகோதரி ஆக இரண்டு பேர் ஆவோம். மூத்த சகோதரி 1 ஆம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கும் எனது சகோதரிக்கும் எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் 05.07.1995 ஆம் வருடம் இரணியலில் உள்ள உமா கல்யாண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.

2. அவர்களது திருமணம் இந்து முறைபடி நடைபெற்றது என்றால் சரிதான். எனது தகப்பனர் அரசு உத்யோகத்தில் இருந்தார் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதியின் திருமணத்தின் போது எனது தகப்பனர் நெய்யூரில் இருந்தார் என்றால் சரிதான். அவர் பணி ஓய்வு பெறும் வரை வாடகை வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு வெள்ளியாகுளத்தில் இரண்டு மனைகள் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதில் ஒரு சொத்தை 1 ஆம் பிரதிவாதியின் மனைவி க்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். ஓய்வு ஊதிய பணத்தை கொண்டு செட்டியார் மடத்தில் இரண்டு மனைகள் வாங்கினார் என்றால் சரிதான்.

3. ஒரு மனையை எனது சகோதரி பெயரிலும் மற்றொன்று எனது பெயரிலும் வாங்கினார் என்றால் சரியல்ல, இரண்டு சொத்துக்ளும் எனது பெயரில் வாங்கினார். எனது தயார் செல்லத்தாய் எனது சகோதரி மீனா உடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். எனது தாயார் பல நாட்கள் உடல் நலம் சரியில்லாமல் இருந்தால் என்றால் 4 வருடங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அந்த காலகட்டத்தில் சகோதரிதான் எனது அம்மாவை உடன் இருந்து பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான். எனது சகோதரி 2018 ல் இருந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான்.

4. எனது சகோதரி மற்றும் தாயார் இருவரும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி இரு நபர்களையும் துளசிதாஸ் என்பவரும், வன்சலா என்பவரும் கவனித்து வந்தனர் என்றால் வன்சலா என்பவர் பணியாள் ஆவார், துளசிதாஸ் உறவினர் என்பதால் அவ்வபோது பார்த்து செல்வார். 1 ஆம் பிரதிவாதியின் உத்தரவின் பேரில் தான் மேற்படி இரண்டு நபர்களும் 1 ஆம் பிரதிவாதியை கவனித்து வந்தார்கள் என்றாலும் நான் கவனிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் தான் 1 ஆம் பிரதிவாதியை கவனித்துக்கொண்டேன் என்பதை காட்ட நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், மருத்துவ ரசீதுகள் என்னிடம் உள்ளது.

5.மீனாவிற்கு என்ன நோய் என்றால் Pancreatic cancer ஆகும். மேற்படி நோய் பல இடங்களில் அவர் சிகிச்சை எடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும் அவர் முதலில் கோலிகிராஸ் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார். பின்பு சித்தரா மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார். நெய்யூர் CSI மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். அவர் எடுத்துக்கொண்ட சிகிச்சையில் எந்த பயனும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். எனவே என்நேரத்திலும் அவருக்கு மரணம் வர வாய்பு இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

6. எனது சகோதரி மீனா கடைசியாக எங்கு என்ன வேலை பார்த்தார் என்றால் மணவாளக்குறிச்சு கடியப்பட்டிணம், அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியில் வேலை பார்த்தார். அவர் பணி பதிவோட்டில் 1 ஆம் பிரதிவாதியின் பெயரை தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் குறிப்பிட்டது போல் 1 ஆம் பிரதிவாதி எனது சகோதரியை அடித்து துண்புறுதியதாக குறிப்பிட்டுள்ளதற்கு ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் உண்மையில் நடந்திருந்தால் புகார் கொடுத்திருப்பார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணத்தில் மனமுறிவு என்ற வார்த்தை குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இந்திய சட்டப்படி நீதிமன்ற மூலம் தான் விவாகரத்து பெறவேண்டும் என்றால் சரிதான், ஆனால் அந்த காலத்தில் சமுதாய பெரியவர்கள் முன்பு பேசுவது தான் வழக்கம். அவ்வாறு எந்த வழக்கமும் கிடையாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எதிர் இடை மனுவில் கேட்டுள்ள பரிகாரம் குறித்து தெரியுமா

என்றால் தெரியும். பிரதிவாதி அவரை MC மீனாவின் வாரிசாக அறிவிக்க வேண்டி பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரிதான்.

8. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்த தகுதியும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் எனது சகோதரியின் உண்மையான வாரிசு என்றாலும் இவ்வழக்கை தாக்கல செய்ய எனக்கு எந்த வழக்கு மூலமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டியது சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி கோரியுள்ள எதிர் கோருரிமை பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**